Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 | கண்மணியைப் போல என்னைக் காத்தருளும் சங்.17:8 | அக்டோபர் 2022 No.10

ஆவியின் வல்லமைக்கான நமது மிக முக்கிய தேவை

Our vital need for the power of the spirit

Samuel Chadwick

சபை தூய ஆவியால் சிருஷ்டிக் கப்பட்டது. தங்கள் மார்க்க வாழ்வினை முதலிலிருந்து கடைசிவரை தூய ஆவி யானவருக்கு அர்ப்பணித்த விசுவாசி களின் ஒரு சமுதாயமே சபை. ஆவியான வரின்றி கிறிஸ்தவனோ சபையோ இல்லை. "பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும் ....." 1கொரி.12:3. அவரது சபையில் இயேசு கிறிஸ்துவை ஆண்டவரென்று அறிக்கை பண்ணுவதே அதில் அங்கத்துவம் வகிப்பதற்கான முதல் நிபந்தனை.

சபை பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வது மிக அவசியம். எனவேதான் பரத்தின் வல்லமை அளிக்கப்படும் வரைக்கும் எருசலேமில் தரித்திருக்கும்படி சீஷருக்குக் கட்டளை அளிக்கப்பட்டது. சபையின் உண்மை யான பணிக்கு வேறு எதுவும் உதவுவ தில்லை. கடைகளை நடத்தவும், சமூகக் குழுக்களை நடத்தவும் ஸ்தாபனங்களை நிறுவவும், சுற்றுலாக்களை ஒழுங்கு பண்ணவும் ஆவியானவர் தேவை யில்லை. மார்க்க சம்பந்தமான சேவை களும், ஒழுங்குபடுத்தப்பட்ட ஸ்தா பனங்களும் ஒரு சபையை உருவாக்கு வதில்லை. இவை தூய ஆவியானவரின் வரமின்றியே செழிப்பாக வளரலாம்.

சரீரத்தின் ஜீவன்

சபையில் ஆவியானவரின் பணியைக் குறித்து அவர் பரத்துக்குப் பிரிந்து போகுமுன் சீஷர்களுக்கு அளித்த வாக்குத்தத்தங்களிலும் அப்போஸ்தலர் நடபடிகளிலும் காணலாம். "அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட நாள் வரைக் கும் செய்யவும், உபதேசிக்கவும் தொடங் கின எல்லாவற்றையும் குறித்து முதலாம் பிரபந்தத்தை உண்டு பண்ணினேன்" அப்.1:2. மேலும் அப்போஸ்தலர் நடபடி களில் அவர் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு அவர் தொடர்ந்து செய்தவை களையும் போதித்தவைகளையும் நாம் படிக்கிறோம். மகிமைப்படுத்தப்பட்ட குமாரனின் சுறுசுறுப்பான ஆளுகை செய்யும் காரணியே தூய ஆவியானவர். அவர் பரத்துக்கெழுந்தருளிய கிறிஸ்து வின் பதிலாளி. கிறிஸ்துவின் தன்மை களை நீடித்திருக்கச் செய்வதும் அவரது அரசினை ஸ்தாபிப்பதும் உலகில் அவரது மீட்பின் பணியினைத் தொடருவதும் அவரது பணிகள். சபை கிறிஸ்துவின் சரீரமும் ஆவியானவர் கிறிஸ்துவின் ஆவியுமாயிருக்கின்றன. அவர் நமது சரீரத்தை நிரப்பி, அதன் அசைவுகளை நடத்தி அங்கத்தினரைக் கட்டுப்படுத்தி அதற்கு ஞானத்தை அளித்து, பெலனை அருளிச் செய்கிறார். அவர் சத்தியத்திற் குள்ளாக வழிநடத்தி, அதன் காரணி களைப் பரிசுத்தப்படுத்தி, சாட்சியாக வாழ்வதற்கான வலிமையை அளிக்கிறார். சபையின் பணிகள் ஆவியானவருக்கு ஊழியம் செய்வதும், அவரது செய்தியைச் சொல்லுவதும் அவரது வல்லமையைக் கடத்துவதுமாகும். அவர் அழைக்கிறவரும் பரிமாறுகிறவரும், கட்டுப்படுத்துகிறவரும், வழிநடத்து கிறவரும், தூண்டுகிறவரும் பலப்படுத்து கிறவருமாயிருக்கிறார்.

ஆவியானவர் ஒருபோதும் தனது அதிகாரத்தை கைவிடுகிறவரோ தமது வல்லமையை மாற்றுகிறவரோ அல்ல. கிறிஸ்துவின் சபையில் போப் அல்லது பார்லிமென்ட் அல்லது மாநாடு அல்லது பரிபாலன குழுக்கள் மேலாண்மை கொள்வதில்லை. தேவனால் ஆளப்படு வதற்குப் பதிலாக, மனிதனால் நிர்வகிக் கப்படும் சபை தோல்வியையே தழுவும். கல்லூரியால் பயிற்சி பெற்ற ஊழியம் அல்ல ஆவியால் நிரப்பப்பட்டு ஏறெடுக் கப்படும் பணிகளே அற்புதங்களை நிகழ்த்தக் கூடும். அனேகக் குழுக்கள் பெருகினாலும் ஜெபம் இல்லையெனில் பணிகள் குழப்பம் நிறைந்தவைகளா கவும், துணிச்சலாகயிருந்தாலும் அதன் உழைப்பு வீணாகவும், பெலன் பலனற்ற தாகவுமாகிவிடும். ஒருவேளை அவை தொழில் நிபுணத்துவம் பெற்றிருந் தாலும் வல்லமையில் தோல்வியையே பெறக்கூடும். எந்திரங்கள் எத்தனை யிருந்தாலும் அவை இயங்க வல்லமை வேண்டுமே. அதுபோல தேவனுடைய உத்தம பணி சபை மூலம் நடைபெற அதற்கு ஆவியானவரின் வல்லமை தேவை.

ஆவியானவரின் பிரசன்னம் வலுவானதும் சபையின் பணிக்கு மைய மாகவுமிருக்கிறது. இதற்கு நிகரானது வேறெதுவுமில்லை. அதில்லாமல் ஞானம் தவறாகவும், பெலன் பெலவீனமாகவும் மாறிவிடும். ஆவியானவர் வெளிப்படுத் தும் வரை கல்வி அறிவு ஆவிக்குரிய சத்தியங்களை அறிந்து கொள்ள முடியாது. அவர் தூண்டும் வரை ஆராதனை விக்கிரகாராதனையாகவே இருக்கும். அவரது வல்லமையின்றி பிரசங்கம் வீணானது. அவர் வலுப்படுத் தாமல் ஜெபம் பிரயோஜனமற்றது. தூய ஆவியானவரின்றி மனித கல்வி ஆதாரங்கள், ஸ்தாபனங்கள், சொத்து, முயற்சி, சீர்திருத்தம் மனித அன்பு எல்லாமே வீணாயிருக்கின்றன.

சபை ஒரேவிதமாக செயல் பட்டால் கூட்டமாக மக்கள் வரலாம். ஆனால் ஷெக்கைனா இருப்பதில்லை. எனவேதான் ஜெபம் என்பது விசுவாசத்தின் பரிசோதனையாகவும் வல்லமையின் இரகசியமாகவுமிருக் கிறது. ஆத்துமாவின் ஜெபவாழ்வில் தேவ ஆவியானவர் நம்மோடு வேதனைப்படு கிறார். அற்புதங்கள் அவரது வல்லமை யின் நேரடி பணிகளாகும். அற்புதங் களின்றி சபை வாழ முடியாது. மாம்ச சிந்தை தாக்கம் செய்யக்கூடியது. ஆனால் ஆவிதான் கண்டித்து உணர்த்தும். கல்வி நாகரிகத்தை ஏற்படுத்தலாம். ஆனால் ஆவியால் பிறந்திருந்தால் மட்டுமே இரட்சிக்கக்கூடும். மாம்ச வல்லமை பெரிய சந்தைகளை நடத்தவும், கேளிக் கைகளை ஒழுங்குபண்ணவும் மில்லியன் கணக்காக மக்களைச் சேர்க்கவும் கூடும். தேவ ஆவியின் பிரசன்னம் மட்டுமே ஜீவனுள்ள தேவனுடைய ஆலயத்தை உண்டுபண்ண முடியும். சபையிலுள்ள தற்கால குழப்பத்திற்கான அடிப்படை காரணம் சபை தூய ஆவியானவர்மேல் நம்பிக்கை வைப்பதைவிடக் கூடுதலான நம்பிக்கையை உலகத்தின் மீதும் மாம்சத்தின் மீதும் வைத்துள்ளது. இது சரிப்பட அவரது பிரசன்னத்தையும் வல்லமையையும் நாடுவது அவசியம். நான்கு திசைகளிலுமிருந்து வீசும் காற்றின் மூச்சு மரணத்தை ஜீவனுக்கும் உலர்ந்த எலும்புகளை பலத்த சேனைக்கும் மாற்றிவிடும். அதற்குத் தேவையானது ஜெபம் மட்டுமே.

ஆவியானவரின் நபரத்துவம், வல்லமை, பணி

ஆவியானவரின் வல்லமை அவரது தனித்துவத்திலிருந்து பிரிக்கப் பட முடியாதது. தேவன் தமது தன்மை களை விட்டு விலகுவதில்லை. அது அவரது சமூகத்திலிருந்து பிரிக்கப்பட முடியாதது. அவர் நம்மில் வாசம் செய்து நம்மை பெலப்படுத்துகிறார். ஆவி ஆவியின் மூலம் கிரியை செய்கிறது. அவர் வல்லமையை அளிக்கிறவர் மட்டுமல்ல, செயலாற்றுகிறவருமாயிருக்கிறார். எவராலும் செய்யமுடியாத பணியினை அவர் செய்கிறார். நம்மிலிருந்து செயல் படும் அவரது வல்லமை, தேவ சித்தம் செய்ய நம்மை வலுப்படுத்துகிறது. நாம்

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.

மாதந்தோறும் தபாலில் / வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

வாசகர் கடிதம்

Praise the Lord

Subscriber No.TJ 01769 S 01.08.2022

கர்த்தருக்குள் அன்புள்ளங் கொண்ட சகோதரருக்கு,

ஆண்டவராகிய கிறிஸ்துவின் நாமத்தில் அன்பான, இனிய வாழ்த்துக்கள்.

வருகையின் தூதன் பத்திரிக்கை சந்தா தொகை இத்துடன் ரூ.200 (Rupees Two Hundred only) காசோலை ஒன்றினை அனுப்பியுள்ளேன். ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

"மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளை கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார்" (மத்.21:22) என்ற வேதவசனத்தின்படி விசுவாசித்து, ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

கர்த்தராகிய ஆண்டவர் இயேசு தங்கள் ஊழியங்களை இன்னும் மென்மேலும் பெருகச் செய்வாராக.

என்றும் அன்புடன் சகோதரன்
M.V.

இணைப்பு : காசோலை எண் 669373/dt.01.08.2022 for Rs.200/-

ஆசிரியர் குறிப்பு : வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.

ஜூலை உபவாச ஜெப அறிக்கை

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

ஜூலை மாத 7 மணி நேர உபவாச ஜெபம் குறித்த அறிக்கையை புகைப்படங்களுடன் (whatsapp) வெளியிடுகிறோம். ராணித்தோட்டம் பெத்தேல் சபை, நாகர்கோவில் அருகிலிருந்தபடியால் காலை 9.30 மணிக்கு Bethel Fellowship Church வந்து சேர்ந்தோம். சபை போதகர் Pr. **V.S. ராஜா** அவர்கள் எங்களை அன்போடு வரவேற்றார்கள். சரியாக 10.00 மணிக்கு சபை போதகர் ஜெபித்து உபவாச ஜெபம் ஆரம்பமானது. போதகர் பிரகாஷ் பாடல் ஆராதனையை நடத்தினார். 10.30 முதல் 11.30 மணி வரை **தரிசன செய்தி** சகோதரர் வெஸ்லி தேவதாசன் கொடுத்தார்கள். 11.30 முதல் 12.30 தேசத்திற்காக ஜெபம் போதகர் அற்புதராஜ்(நிம்ஸ் சபை, சுந்தரபாண்டியம்) நடத்தினார்கள். 12.30 முதல் 1.30 வரை **சிறப்பு செய்தி** சகோதரர் வெஸ்லி தேவதாசன் கொடுத்தார்கள். 1.30 முதல் 2.30 வரை நிம்ஸ் வட இந்திய ஊழியங்களுக்காக ஜெபம் சகோதரர் கிப்சன் சாமுவேல் (Promotional Secretary, NIMS, Gujarat) நடத்தினார்கள். 2.30 முதல் 2.45 வரை தேனீர் இடைவேளை, எனது மகள் Josefa Stephane விசேஷ பாடல் பாடினாள். 2.45 முதல் 3.45 வரை அருட்பணி இயக்கம் சார்பாக சகோதரர் துரைசிங் (Zonal Secretary, IEM, Madurai) அவர்கள் இந்திய தேசத்தின் இன்றைய நிலை, மிஷனெரி ஊழியத்தின் தேவை மற்றும் நாம் அர்ப்பணிப்போடு செயல்பட வேண்டியதன் அவசியம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் மிஷனெரிகள் ஆற்றிய விலையேறப் பெற்ற பணிகள் குறித்து படக்காட்சிகளோடு விளக்கி ஜெபித்தார்கள்.

3.45 முதல் 4.45 வரை **நிறைவு செய்தி** சகோதரர் வெஸ்லி தேவதாசன் கொடுத்தார்கள். 4.45 முதல் 5.00 வரை விசேஷ ஜெபம் பெத்தேல் சபைக்காக, போதகருக்காக, விசுவாசிகளுக்காக மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திற்காக போதகர் பிரகாஷ் நடத்தினார்கள். நிறைவாக சபை போதகர் வருகையின் தூதன் ஊழியம், அதின் முன்னாள் ஆசிரியர் காலஞ்சென்ற போதகர் **S.தேவதாசன்** குறித்தும் மற்றும் உபவாச ஜெபம் குறித்தும் சில காரியங்களை பகிர்ந்து கொண்டார். தொடர்ந்து உபவாச ஜெபம் மற்றும் அதை நடத்தும் ஒவ்வொருவருக்காகவும் ஜெபித்து ஆசீர்வாதம் கூறி முடித்தார்கள்.

விசுவாசிகள் திரளாய் கலந்துகொண்டு வாஞ்சையோடு ஜெபித்தார்கள், அது ஆசீர்வாதமாயிருந்தது. சிலநாள் கழித்து அந்த சபையின் விசுவாசி ஒருவரை சந்தித்த போது அவர் கூறியது : "அநேகர் 7 மணி நேர உபவாச ஜெபம் மிகவும் ஆசீர்வாதமாயிருந்தது, ஜெபம் மற்றும் செய்திகள் உள்ளத்தை தொட்டதாகவும், 7 மணி நேரம் தொய்வில்லாமல் நடைபெற்றது என்றும், சாதாரணமாக மதிய உணவு தாமதமானால் பசிக்கும் ஆனால் 7 மணி நேர உபவாச ஜெபம் நடந்தபோது மாலை வரை பசிக்கவும் இல்லை சோர்பும் ஏற்படவில்லை, வெவ்வேறு நபர்கள் ஜெபத்தை நடத்தினாலும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையதாய் நேர்த்தியாய் நடைபெற்றதாக சாட்சி கூறியதாக" சொன்னார்கள். கர்த்தர் ஒருவருக்கே துதி கனம் மகிமை எல்லாம் உண்டாவதாக. சபையை ஜெபத்திற்கு திறந்து கொடுத்து, அனைத்து ஒழுங்குகளையும் செய்த சபை போதகர் Pr. V.S. ராஜா குடும்பம், மற்றும் விசுவாசிகளுக்கும் எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம். குறிப்பாய் இந்த சபை ஓர் மிஷனெரி சபையாய் காணப்படுகிறது. அநேக ஊழியர்களை உருவாக்கி, சபைகளை ஸ்தாபித்து, கிராமங்களில் ஊழியங்களை செய்கிறார்கள். கர்த்தர் அவர்கள் ஊழியங்களை ஆசீர்வதித்து மேலும் வல்லமையாய் தேவனுடைய இராஜியபணியில் பயன்படுத்துவாராக.

மேலும் 7 மணி நேர உபவாச ஜெப ஊழியங்களை ஜெபத்தினாலும் உதாரத்துவமான தியாக காணிக்கைகளினாலும் தாங்கின யாவரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

தேவகிருபை உங்களோடிருப்பதாக.

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

கிறிஸ்துவுக்குள்
W. சாமுவேல் பின்னி

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் தயவுசெய்து உங்கள் பத்திரிகை பதிவு எண், உங்கள் தொலைபேசி எண் இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்

தயவாய் உடனே எங்களுக்கு தெரிவியுங்கள்

SMS அனுப்ப : **9489740295, 95432 21008**

e-mail:varukayinthoothan@hotmail.com

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON**, A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

ஜெபிக்கும் போது வல்லமையை அவருக்காக அல்ல, நமக்காகக் கேட்கிறோம். வல்லமையின் சாதனைகளுக்காக அதிகக் கவலைப்படுவது ஆவியின் வல்லமையை நாடுவதைவிட மேலானதல்ல. நாம் கண்கூடாகக் காணக்கூடிய பலன்கள், அற்புதங்கள், செயல்கள் போன்றவற்றை விரும்புகிறோம். ஆனால் இவைகளுக்காக ஆவியின் வலிமை கொடுக்கப்படவில்லை. இந்த வல்லமை, அமைதி காக்கவும், பேசவும், உயர்ந்த இடங்களிலும், மறைவான இடங்களிலும் தேவையானது. அவர் வந்து தேவசித்தத்தின்படி நம்மை பயனுள்ளவர்களாக்குவார். ஒரே ஆவியில் பணியிலும் வெளிப்படுதலிலும் வேறுபாடுகள் இருக்கின்றன.

ஆவியின் பணி ஆவியின் வல்லமையைச் சார்ந்தது. மாம்ச பெலன் ஆவியின் பணியினைச் செய்ய இயலாது. அவரது வல்லமைக்கு இணையானது எதுவுமில்லை. சீயோன் பாபிலோனிய தங்கத்தை இச்சித்து, பாபிலோனிய வழிகளைக் கடைபிடித்து, பாபிலோனிய மேடைகளை அமைத்து, பாபிலோனிய ஆயுதங்களை பயன்படுத்தி யுத்தம் செய்யும் போது ஆவியின் பெலனை இழந்துவிடுவதால் அதன் பெலன் குன்றுகிறது. ஆவிக்குரிய காரியங்களில் மாம்ச ஆதாரங்கள் பயன்படுவதில்லை. இந்தப் போராட்டத்தில் ஜெபம் வல்லமையை கொண்டு வருகிறது. ஏனெனில் ஜெபிக்கிறவர்கள் ஆவியின் வல்லமையைப் பெறுவார்கள். முற்று கைக்குச் சிறந்த ஆயுதம் சாட்சி. ஆவியானவர் சாட்சி கூற பலப்படுத்துகிறார். அவர் வல்லமையோடு சாட்சி கூறும் ஜீவனுள்ள சாட்சிகள் மூலம் இரட்சிக்கிறவர். ஆவியானவரின் வல்லமை, பாவ உணர்வையும் நீதியையும், நியாயத் தீர்ப்பையும் கொண்டு வருகிறது. எனவே சபையின் பணி இயற்கைக்கு மேலானது. அது இயற்கை மனிதனால் செய்யக் கூடாதது. பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல கர்த்தருடைய ஆவியினாலேயே ஆகும் சக.4:6. தோல்விக்குக் காரணம் வேறு எதுவுமல்ல. ஏனெனில் தேவ ஆவியானவர் வல்லமையின் ஆவியானவராகவும் ஆவியின் வரமாகவும், அனைத்து விசுவாசிகளின் சுதந்தரமுமானவர்.

வல்லமையின் ஆவியானவர் எங்கே?

அப்போஸ்தல சபை தெய்வீக வல்லமையால் நிறைந்தது. அவர்களது வார்த்தை வல்லமையுள்ளதாகவும் தொடர்ந்து பாவ உணர்வை ஏற்படுத்துவதுமாயிருந்தது. அற்புதங்களும் அடையாளங்களும் அவர்கள் சாட்சியை உறுதிப்படுத்தின. தீமை செய்கிறவர்களின் இருதயத்தை அது திறந்து பரலோகம் அவர்களது நியாயத்தீர்ப்புக்கு முத்திரையிட்டது. ஆட்சியாளர்கள் அவர்களுக்கு முன்பாக நடுங்கினார்கள். மரித்தவர்கள் அவர்களது சத்தத்தைக் கேட்டார்கள். வியாதிகள் அவர்கள் தொட்டதும் மறைந்தன. பேய்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தன. ஆவியின் பிரசன்னம் தெய்வீக அதிகாரத்தாலும் வல்லமையாலும் மக்களை நிறைத்தது. அவர்கள் ஆவியால் போதிக்கப்பட்டபடியால் தேவனுடைய உள்ளத்தைக் குறித்த நிச்சயமுடையவர்களாயிருந்தனர். ஆவியில் ஜெபித்தபடியால் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டனர். ஆவியின் பெலத்தால் பலத்த காரியங்களைச் செய்தார்கள். சபையின் சாதாரண வாழ்வு ஆவியின் நிறைவால் நிரப்பப்பட்டு, தூண்டப்பட்டு வல்லமைப் படுத்தப்பட்டது.

தூய ஆவியானவருக்கு பதிலாளி எவருமில்லை. சபையின் திருப்தி மக்களல்ல தேவன். சபைமக்களின் ஆவிக்குரிய தாழ்ச்சி சபையின் தோல்விக்குக் காரணம். நமது தோல்விகள் எல்லாவற்றிற்கும் ஒரே காரணம் நாம் தூய ஆவியானவர், சத்திய ஆவியானவர், ஜீவனை கொடுக்கிற ஆண்டவர் என்று விசுவாசிக்கவில்லை என்பதுதான்.

கடைசி நாட்களில் வாழ்வுக்கும் ஊழியத்திற்கும் தேவையான தெய்வீக வல்லமை

Divine power for life and ministry in the last days

Rich Carmicheal

இக்கால அடையாளங்கள் நாம் நமது ஆண்டவருடைய வருகையின் முன்னான இறுதி நாட்களில் வாழ்கிறோம் என்பதைக் காண்பிக்கின்றன மத்.24:6-7 வசனங்களின்படி "யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள்; கலங்காதபடி எச்சரிக்கையாயிருங்கள்; இவைகளெல்லாம் சம்பவிக்க வேண்டியதே ஆனாலும் முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாக ராஜ்யமும் எழும்பும்; பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும்". இன்று நாம் இவைகளைப் பார்க்கவில்லையா?

எடுத்துக்காட்டாக ரஷியா, உக்ரைன் யுத்தத்தினை எடுத்துக் கொள்வோம். யுத்தம் மாத்திரமல்ல அதினால் பல நாடுகளும் பல்வேறு கஷ்டங்களை அனுபவிக்கின்றன என்பதை நாம் காண்கிறோம். இந்த யுத்தத்தால் உலக மெங்குமே உணவு பற்றாக்குறை ஏற்படும் நிலை உருவாகிறது.

இந்த யுத்தம் அணு ஆயுத யுத்தமாக மாறும் வாய்ப்பும் உள்ளது. மேலும் ஈரான் இஸ்ரவேலுக்கு எதிராக ஒரு பய முறுத்தலாக மாறலாம். வட கொரியாவின் அணுசக்திகளின் நிலை என்ன?

சீனாவின் பொருளாதார வலிமை, ராணுவபலம் மற்றும் அரசியல் பேராசை ஆகியவை தேசங்களுக்கிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. சீனா தைவானை முற்றுகையிடத் தீர்மானித்தால் உலகத்தின் நிலை என்ன? உலகத்தில் மற்றும் புதிய உலக ஒருங்கிணைப்பினை குறித்த இயக்கம் என்ன வாகப் போகிறது?

இயற்கைப் பேரழிவுகள் அதிகரித்து வருகின்றன. கடந்த இரு ஆண்டுகளாக உலகமெங்கும் ஏற்பட்ட கொள்ளைநோய் பாதிப்புகளையும் எண்ணிப்பாருங்கள்.

இன்னும் பல அடையாளங்கள்

இயேசுவும் முடிவுகால அடையாளங்களில் ஏமாற்றுதல், ஆவிக்குரிய மற்றும் சன்மார்க்க சமுதாய வீழ்ச்சிகளைக் குறித்து மத்.24:9-12 வசனங்களில் குறிப்பிட்டுள்ளார். உலகமெங்கும் இத்தகைய அனுபவங்களை நாம் பார்க்கிறோமல்லவா? திருமணம் பாலினம் ஆகியவற்றினைக் குறித்து ஆண்டவராகிய இயேசு மிகத் தெளிவாக சிருஷ்டிப்பின் ஆதிமுதல் அவர் நம்மை ஆணாகவோ பெண்ணாகவோ சிருஷ்டித்ததாகவும் திருமணம் என்பது ஆணுக்கும் பெண்ணுக்குமிடையிலான பரிசுத்தமான உறவு என்றும் தெளிவுபடக் கூறியுள்ளார். ஆனால் இன்று அவை எவ்வாறு அடிப்படை சத்தியங்களை இழந்து நிற்கின்றன!

அப்போஸ்தலனாகிய பவுல் இந்நிலைகளால் ஆவிக்குரிய, சன்மார்க்க மற்றும் சமூக நிலைகள் கடைசி நாட்களில் வீழ்ச்சியடையும் என்பதனை 2 தீமோ.3:1-5 வசனங்களில் எடுத்துக் கூறுகிறார். "மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. எப்படியெனில் மனுஷர்கள் நற்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும் நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவபிரியர்களாயிராமல் சுகபோகபிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்". இவற்றில் கடைசியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது மிகவும் ஆபத்தாக, சபையின் மாய்மாலத்தன்மை வளர்ந்து வருவதைக் காண்பிக்கிறது.

தெய்வீக வல்லமை

மேற்கூறியவை தவிர இன்னும் பல அடையாளங்கள் நாம் விழித்தெழும்பி செயல்பட நம்மை அழைக்கின்றன. இதுவே தேவபிள்ளைகள் உலகுக்கு உப்பாகவும் ஒளியாகவும் செயல்படுவதற்கு ஏற்ற நேரம். தேவத்துவத்தின் பெலனை மறுதலிப்பதற்குப் பதிலாக, சபை ஆவியின் வல்லமையால்

(4-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்க தொடர்ச்சி)

நிரம்பி, தேவனுக்கு மகிமையையும், மக்களை அவரிடம் கொண்டுவருவது மான வாழ்வை வாழ அழைக்கப்படு கிறது.

வாழ்வுக்கும், தேவ பணிக்கும் நாம் தேவ ஆவியால் நிரப்பப்படுவது அவசியம். இயேசுவின் கட்டளைப்படி, "..... நீங்களோ, உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்" லூக்.24:49. நமது பரமபிதா கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பு வதற்கு பயன்படுத்திய அதே வல்லமை நம்மில் செயல்பட வேண்டும். "தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே, விசுவா சிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண் பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்ன தென்றும் நீங்கள் அறியும்படிக்கு அவர் உங்களுக்குப் பிரகாசமான மனக்கண் களைக் கொடுக்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுகிறேன்" எபே..1:19.

இந்த தெய்வீக வல்லமை, ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய திவ்விய வல்லமையானது அருளினது 2பேதுரு1:3.

சமீபத்திலும் மட்டுமல்ல உலக மெங்கும் சாட்சியாயிருக்க இந்த தெய் வீக வல்லமை பயன்படுகிறது. "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சி களாயிருப்பீர்கள் என்றார்" அப்.1:8.

ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றிபெற இந்த வல்லமை பயன்படு கிறது. "கடைசியாக சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள்; நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள்" எபே.6:6. "எங்களுடைய போராயுதங்கள், மாம் சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண் களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபல முள்ளவைகளாயிருக்கிறது" 2 கொரி.10:4. "மகிமையான அவருடைய வல்லமை யின்படி, எல்லா வல்லமையாலும் பலப் படுத்தப்படவும், உங்களுக்காக வேண்டி கொள்ளுகிறோம்" கொலோ.1:11.

பாடுகளை சகிப்பதற்கு இந்த வல்லமை ஆதாரமாயிருக்கிறது. "தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியை கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார். ஆகை யால் நம்முடைய கர்த்தரைப் பற்றிய சாட்சியைக் குறித்தாவது, அவர் நிமித்தம் கட்டப்பட்டிருக்கிற என்னைக் குறித்தா வது நீ வெட்கப்படாமல், தேவ வல்லமைக் கேற்றபடி சுவிசேஷத்திற்காக என்னோடே கூட தீங்கனுபவி" 2 தீமோ.1:7,8.

இந்த வல்லமை பெலவீனங்கள், அவமானங்கள், தேவைகள், பாடுகள், உபத்திரவங்கள் போன்றவைகளின் மத்தியிலும் நம்மை பலப்படுத்தக் கூடியது. "அதற்கு அவர் : என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என் பலவீனங் களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷ மாய் மேன்மை பாராட்டுகிறேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படு கிறேன்" 2 கொரி.12:9-10.

ஊழியம் செய்யவும் இந்த வல்லமை பயன்படுகிறது. "ஸ்தேவான் விசுவாசத்தினாலும், வல்லமையினாலும் நிறைந்தவனாய் ஜனங்களுக்குள்ளே பெரிய அற்புதங்களையும் அடையாளங் களையும் செய்தான்" அப்.6:8. "அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப் படுகிறேன்" கொலோ.1:29.

இந்த தெய்வீக வல்லமை கிறிஸ்துவின் அன்பால் நிரப்பப்படவும் தேவத்துவத்தின் நிறைவால் நிரப்பப் படவும் ஏதுவானது: "நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத் தினால் கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும் நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலை பெற்றவர்களாகி சகல பரிசுத்தவான்களோடும்கூட கிறிஸ்துவி னுடைய அன்பின் அகலமும் நீளமும் ஆழமும் உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாக வும் தேவனுடைய சகல பரிபூரணத் தாலும் நிறையப்படவும் அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின் படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன்" எபே.3:16-19.

இந்த தெய்வீக வல்லமை நம்மை சந்தோஷம், சமாதானம், நம்பிக்கை ஆகியவற்றால் நிரப்புகிறது. "பரிசுத்த ஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு நம்பிக்கை யின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினா லும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக" ரோமர் 15:13.

வார்த்தையிலும் வல்லமையிலும் பெருகிய சுவிசேஷம்

இந்த கடைசி நாட்களில் அவரது ஆவியின் நிறைவைப் பெற்றுக்கொள்ள நாடுவீர்களாக. கர்த்தரின் வருகை சமீபம் என்பதைக் காட்டும் அடையாளமாக இயேசு கூறியது : "ராஜ்யத்தினுடைய இந்தச் சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; அப்பொழுது முடிவு வரும்" மத்.24:14. இதைக் குறித்து பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதுவதை 1 தெச.1:5-ல் படியுங்கள். தேவ ஆவியைப் பெற்ற தேவ பிள்ளைகள் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும்.

"நாம் வேண்டிக் கொள்ளுகிறதற் கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிக மாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசு மூலமாக தலை முறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக" ஆமென் எபே. 3:20,21.

நெருக்கமான ஊழியம் போதுமான ஜெபமும் ஆவிக்குரிய புதுப்பித்தலும் இல்லாவிட்டால் ஆவிக்குரிய வல்ல மையை இழக்கச் செய்துவிடும்.

இழந்துபோன ஆவிக்குரிய வல்லமை புதுப்பிக்கப்பட முடியும்

Depleted spiritual power can be renewed

Wesley Duewel (1916-2018)

தூய ஆவியானவர் நம்மை நிரப்பும் போது அவர் நமக்கு பரிசுத்தத் தையும் வல்லமையையும் அளிக்கிறார். ஒருவன் தன்னை ஜீவபலியாக முழுமை யாக தேவனுக்கு அர்ப்பணித்து, ஆவி யானவர் தன்னை நிரப்பும்படி கேட்கும் போது ஆவிக்குரிய வாழ்வில் ஒரு புதிய நிலைக்கு நேராக வழிநடத்தப்படுகி றான். தூய ஆவியானவர் அவனைக் கழுகி, அவனது உள்ளான வாழ்வை ஒரு போதுமில்லாதபடி தூய்மைப்படுத்தி, தெய்வீக மிகப்பெரிய வல்லமையால் நிரப்புகிறார்.

இவ்வாறு ஆவியால் நிரப்பப் பட்டு வசனத்தின் வெளிச்சத்தில் ஆவியால் நடத்தப்படும்போது அவன் தொடர்ந்து கர்த்தரைப் பிரியப்படுத்த விரும்புகிறான். ஒவ்வொரு நிமிடமும் அவனில் வாழும் ஆவியானவரை அவன் சார்ந்துகொண்டு வாழ்வதால் அவர் அவனை சோதனைகளில் வெற்றிபெறும் படிசெய்கிறார். ஆவியானவரால் அவனது பரிசுத்தம் பாதுகாக்கப்படுகிறது. இன்னொரு விதமாகக் கூறினால் நாம் நம்மை 1தீமோ.5:22 -ன்படி ஆவியானவருக்குக் கவனமாகக் கீழ்ப்படிவதின் மூலம் (1யோவா3:3) எல்லாவற்றையும் சோதித்து நன்மையானவைகளைப் பற்றிக் கொண்டு தீமையானவைகளை விலக்கி (1தெச.5:21-22) வாழமுடியும். இவ்வாறு பாவத்தால் கறையில்லாமலும், பிழையில்லாமலும் வாழ முடியும் (2 பேதுரு 3:14)

ஆனால் ஆவிக்குரிய வல்லமை வித்தியாசமானது. அவனது ஆவியின் வல்லமை என்பது அவரது சக்தி நமது ஆவிக்குள்ளும் ஆவியின் வழியாகவும் பாய்ந்து செல்வதாகும். வல்லமை செலவழிகிறது. அது புதுப்பிக்கப்பட வேண்டும். இந்த ஆவிக்குரிய இரகசியம் அழகாக சகரியா 4-ல் அடையாளப் படுத்தப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

யோசுவா பிரதான ஆசாரியனாக வும் செருபாபேல் அதிபதியாகவும் இருந்த காலத்தில், தேவன் சகரியாவுக்கு ஒரு காட்சியின் மூலம் அவர்களை உற்சாகப்படுத்தினார். அவர்கள் இருவரும் தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர் களும் முற்றுகைக்குப் பின்பு தேவாலயத் தைத் திரும்பக் கட்டும் தலைவர்களு மாயிருந்தனர். பயங்கரமான எதிர்ப் பினால் இருபது ஆண்டுகளாகப் பணி தடைபடுத்தப்பட்டிருந்தது.

அவரது வல்லமையான கூற்று அவரது வல்லமையை உறுதிப்படுத் தியது. ".....கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால் : பலத்தினாலுமல்ல, பராக்கிரமத்தினாலுமல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனை களின் கர்த்தர் சொல்லுகிறார்" சக.4:6. தேவன் சகரியாவுக்கு ஒரு பொன் னாலான விளக்குத் தண்டும் வெளிச்சம் கொடுப்பதற்கு ஒரு கிண்ணம் ஏழு விளக்குகளுக்கு ஒலிவ எண்ணெயைச் செலுத்திக் கொண்டிருந்ததைக் காண்பித் தார் (ஏழு விளக்குகள் முழுமையாக வெளிச்சத்தைக் காண்பிக்கின்றன) கிண்ணத்திற்கு எண்ணெய் இரு பொன்னாலான குழாய்கள் மூலம் ஒரு ஜீவனுள்ள ஒலிவ மரத்திலிருந்து வந்தது. எண்ணெய் பாய்ந்து கொண்டிருக்கும் வரை விளக்குகள் எரிந்து வெளிச்சம் கொடுத்தன.

ஆவியானவரின் வல்லமை தேவபணி செய்ய மிகவும் தேவை. ஆனால் செலவு செய்வதால் அது குறையக்கூடியது. நேற்றைய வலிமை யால் இன்று ஊழியம் செய்ய முடியாது. தேவசித்தத்தின் முழுமையை பழைய நினைவுகள், பழைய ஆசீர்வாதங்கள், பழைய வல்லமை ஆகியவற்றால் நிறை வேற்ற முடியாது. நாம் கடந்து போன காலங்களில் வாழ்வதை தேவன் விரும்ப வில்லை. அவரது வல்லமையில் நிமிடா நிமிடம் அவரது வல்லமையைப் பெற்று வாழ்வதே அவரது சித்தம்.

அரிதான சிலவேளைகளில் தேவன் நம்மை வித்தியாசமாக பயன் படுத்துவதுண்டு. அதை சிம்சோன் பிலேயாம் மற்றும் சில வேளைகளில் சவுல் அரசன் ஆகியோருடைய வாழ்வில் காணலாம். ஆனால் தேவனுடைய சட்டம் நாம் பெற்றுக்கொண்டதை மட்டுமே கொடுக்க முடியும் என்பதா கும். ஒவ்வொரு நாளும் வல்லமை படுத்தப்பட்டு ஒவ்வொரு நாளும் அவரது மகிமைக்காக பயன்படுத்தப்பட வேண்டும் என்பதுவே தேவனது திட்டம்.

எப்படி ஆவிக்குரிய வல்லமை குறைந்து போகிறது அல்லது இழந்து போகிறது

இயேசு கிறிஸ்து தமது ஊழி யத்தை ஒரு விசேஷித்த பரிசுத்த ஆவியின் வல்லமையின் அனுபவத்தைப் பெறுமுன் ஆரம்பிக்கவில்லை. "கர்த்த ருடைய ஆவியானவர் என்மேல் இருக் கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்....." லூக்.4:18. கிறிஸ்துவின் ஊழியத்தினை பேதுரு சுருக்கமாக "நசரேயனாகிய இயேசுவை தேவன் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினா லும் அபிஷேகம் பண்ணினார்" என்று அப்.10:38-ல் குறிப்பிடுகிறார். இயேசு பயன்படுத்திய அதே வல்லமையை ஊழி யத்தில் நாம் பயன்படுத்த வேண்டும். அது ஆவியின் வல்லமை, அவர் தமது தெய்வீகத் தன்மையில் ஊழியஞ்செய்ய முற்படாமல் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்று ஊழியம் செய்தார்

லூக்.6:19-ல் "அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினபடியினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகைதேடினார்கள்." இதுவே ஆவியின் வல்லமை. பன்னிரெண்டு வருடங்களாய் பலவீனப்பட்டிருந்த பெண் அவரு டைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்ட போது, அவர் "என்னிலிருந்து வல்லமை புறப்பட்டதை அறிந்திருக்கிறேன். ஆதலால் ஒருவர் என்னைத் தொட்ட துண்டு" என்றார் லூக்.8:46.

இயேசு செய்ததை நாமும் செய்ய முடியும். நீங்கள் ஜனங்களுக்குப் பணிவிடை செய்யும்போது நீங்கள் ஆவிக்குரிய வல்லமையைச் செலவிடு கிறீர்கள். தேவனால் நீங்கள் தொடர்ந்து பயன்படுத்தப்படவும், மனித காயங் களை ஆற்றவும் தேவ வல்லமை உங்களில் தொடர்ந்து பாய்ந்து கொண்டிருக்க வேண்டும்.

1. ஆவிக்குரிய வல்லமை இயற்கையாகவே உங்கள் பணிவிடை மூலம் செலவாகிறது

எவ்வளவாக ஊழியம் செய்கி றோமோ அவ்வளவாக உங்களில் வல்லமை புதுப்பிக்கப்பட வேண்டும். எவ்வளவு சுறுசுறுப்பாக நாம் இருக்கி றோமோ அவ்வளவாக வல்லமையும் புதுப்பிக்கப்பட வேண்டும். அது மனதள விலோ சரீரத்திலோ ஏற்படும் களைப் பல்ல.

ஒருமுறை லூதர் அவரது அடுத்த நாள் திட்டத்தைக் குறித்து, "பணி, பணி, அதிகாலையிலிருந்து பின்னிரவு மட்டும் வேலை. எனக்கு அதிக வேலைப்பளு இருப்பதால் ஒவ்வொரு நாள் காலை யிலும் முதல் மூன்று மணி நேரங்களை ஜெபத்தில் செலவிடுவேன்" என்றாராம். நெருக்கமான ஊழியம் போதுமான ஜெபமும் ஆவிக்குரிய புதுப்பித்தலும் இல்லாவிட்டால் ஆவிக்குரிய வல்லமையை இழக்கச் செய்துவிடும்.

2. ஆவிக்குரியதல்லாத காரியங்களில் ஈடுபடுவதால்

நாம் அடிப்படையாக லௌகீக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் தனிமையாக அல்ல பிறரோடு சேர்ந்து வாழுகின்றோம். நம்மை மாசு படுத்தக்கூடிய தாக்கமுடைய வாழ்வி லிருந்து தனிமைப்படுத்த விரும்ப வில்லை. நாம் இந்த உலகில் உப்பாகவும் ஒளியாகவும் வாழ அழைக்கப்பட்ட வர்கள். ஆனால் எரிவதால் வெளிச்சமும் பயன்படுத்துவதால் உப்பும் செலவாகி விடுகின்றன.

பணிக்கும், ஆத்மீகத்திற்குமிடை யில் மாற்றுக் கருத்தில்லை. கடின உழைப்பாளிகள் எப்போதும் மிக நல்ல கிறிஸ்தவ பணியாளர்களாகவும், ஜெப வீரர்களாகவும் இருக்கிறார்கள். ஆயினும் அனேகர் அதிகமாய் ஆசீர்வதிக்கப்படக் கூடாதபடி அதிக சோம்பேறிகளாயிருக் கிறார்கள். அவர்கள் சுயகட்டுப்பாடு மற்றும் வேதவாசிப்பு ஜெபம் ஆகிய வற்றிற்கு முதலிடம் கொடுப்பதில்லை. அவர்கள் சகரியா 4-ம் அதிகாரத்தின் பாடத்தைக் கற்றுக்கொள்ளவில்லை. தங்கள் சொந்த வல்லமையால் வாழ விரும்பி, தேவ ஆவியின் வல்லமையை உதாசீனம் பண்ணுகிறார்கள்.

வேலைகளின் பல வடிவங்களில் சுருக்க ஜெபம், துதி, ஆவிக்குரிய உறவு மற்றும் ஆண்டவரின் மேலுள்ள அன்பை வெளிப்படுத்துதல் போன்றவற்றிற்கு அற்புதமான வாய்ப்புகள் உண்டு. ஆனால் பலவேளைகளில் தேவன் நமது பக்கத்தில் இல்லாதது போல நடந்து கொள்ளுகிறோம். அவரை நாம் புறக் கணிக்கிறோம். நாம் நமது உள்ளங்களை மனோபாவனைகள், சுயபரிதாபம், சுயதிட்டங்கள் ஆகியவற்றால் நிரப்பி விடுகிறோம். நாம் சலவை செய்யும் போதும், நடக்கும் போதும், வாகனங் களை ஓட்டும்போதும் எந்த வேலையைச் செய்தாலும் விருப்பமிருந்தால் நேரத்தை தேவனோடுகூடச் செலவிட முடியும்.

ஆனால் சிற்சில சூழல்களில் இது கடினமானது. அது ஆவிக்குரிய செயல் களுக்கு சாதகமற்றிருப்பதோடு பாதக மாகவுமிருக்கலாம். சில வேளைகளில் லோத்துவைப் போல கிரமம் கிரமமாக ஆவிக்குரிய வலிமை இழந்து போவதை உணரலாம் (2 பேது.2:7) தொடர்ந்து நம்பிக்கை இழப்பு துன்பங்கள் தொடர லாம்.

ஆவிக்குரிய உறவுக்கும், புதுப் பித்தலுக்கும் ஆத்தும அமைதி தேவை. சிலர் தொலைக்காட்சி, ரேடியோ போன்றவற்றில் அதிகப் பிரியம் கொண்டு அமைதி நேரம் ஆவிக்குரிய மலர்ச்சிக்கு எப்படி அவசியமானது என்பதை அறியா திருக்கிறார்கள். வேதாகம நாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் அல்லது கூடாரத்தில் பணிவிடை செய்யும்முன் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டார்கள். நமக்கும் ஆவிக்குரிய ஸ்நானம் அவசியம் அல்லது அடிக்கடி தேவசன்னிதானத்தில் சமயம் செலவிட வேண்டும்.

3. பிற கிறிஸ்தவர்களோடுள்ள ஐக்கியக் குறைவு நமது ஆவிக்குரிய வல்லமையைத் தணிக்கிறது :

பரத்திலிருந்து இறங்கும் பனித் துளிபோல ஐக்கியம் ஆவிக்குரிய புதிதாக்குதலையும் ஆசீர்வாதத்தையும் கொண்டுவருவதாக தாவீது கூறுகிறார் சங்.133:3. ஒற்றுமையின்மை இதற்கு எதிரானது. அது ஆத்துமாவை வறட்சி யடையச் செய்து, ஆவிக்குரிய வாழ்வை வாடச் செய்கிறது. கோபமான எண்ணங் கள், கேடான மனநிலைகள், மன்னி யாமை, இருதய கசப்பு போன்றவை வல்லமையை இழக்கச் செய்யும்.

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்க தொடர்ச்சி)

மற்றவர்களைக் குறித்த இரக்க மற்ற எண்ணங்கள் தேவனுடைய ஆசீர் வாதங்கள், அபிஷேகம் ஆகியவற்றை துரிதமாக நம்மிடமிருந்து அகற்றிவிடும். அன்பற்ற வார்த்தைகள், வீண்பேச்சு, சிரிப்பு, எதிர்மறைப் பேச்சுகள் போன்றவை உங்கள் வல்லமையையும் தேவனுடைய இனிய பிரசன்னத்தையும் இழக்கச் செய்யும். தூய ஆவியானவரின் கனிவான அன்புக்கு எதிரிடையான செயல்கள் யாவும் ஆவிக்குரிய வலிமையை பெலவீனப்படுத்தும்.

தூய ஆவியானவரை துக்கப் படுத்துவது எது என்று உடனடி கண்டு கொள்ளும் உணர்வுடனிருக்கிறீர்களா? தேவ பிள்ளைகளைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகி றான் சக.2:8. பலமணி நேரங்கள் ஜெபித்து பெற்றுக்கொண்ட ஆசீர்வாதத்தை ஒரு தேவையற்ற பேச்சினால் இழக்கலாம். தூய ஆவியானவர் பூரண அன்பின் சாதுவான ஆவியானவர். அவரது பணியில் ஒன்று "பரிசுத்த ஆவியினால் தேவ அன்பு நம்முடைய இருதயங் களிலே ஊற்றப்பட்டிருக்கிறது" ரோமர் 5:5. அவருடைய அன்பின் தன்மையை நாம் துக்கப்படுத்தக்கூடாது.

ரோமர் 14:10-ல் பவுல் கடினமாக இப்படிக் கேட்கிறார்: "இப்படியிருக்க உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாயெண்ணுகிறதென்ன? நாமெல் லாரும் கிறிஸ்துவினுடைய நியாயா சனத்திற்கு முன்பாக நிற்போமே". மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? 14:4. மற்றவர்களை நியாயந்தீர்க்கும் எண்ணம் ஆவியானவரை எப்போதும் துக்கப்படுத்தும்.

எபேசி.4:30 - 5:2 வரை படிக்க.

4. கீழ்ப்படியாமை ஆவிக்குரிய வல்லமை யைத் தணிக்கும்

தேவனுடைய ஒளியில் தொடர்ந்து நடவாமலும், தேவன் கொடுக்கும் வாய்ப்புகளை ஏற்றுக் கொள்ளாமலும் இருப்பது ஆவியின் வல்லமையைத் தணிக்கும். தேவன் தொடர்ந்து இயேசுவுக்காக அதிகமான செயல்களைச் செய்ய வாய்ப்புகளைத் தருகிறார். நாம் இயேசுவை எவ்வாறு நேசிக்கிறோம், அவரை பிரியப்படுத்த என்ன செய்கிறோம் என்பதனை வெளிப்படுத்த இவைகள் வாய்ப்புகளாக அளிக்கப்படுகின்றன.

அவர் மேலுள்ள அன்பின் செயல்கள் பெருகுவது போல, அவரது அருகாமையும் ஆசீர்வாதமும் உங்கள் மேல் பெருகும். அதேபோல் அன்பின் செயல்கள் குறைவதால் அவரது இனிய பிரசன்னத்தையும் இழந்துவிடுகிறோம்.

உங்கள் அன்பை எண்ணத்திலும் வார்த்தையிலும், செயலிலும் வெளிப் படுத்த ஜாக்கிரதையற்றிருப்பதால் ஆவிக்குரிய கவலைனமும் கிரமமாக ஆவிக்குரிய பிரசன்னமும் வல்லமையும் குறைய நேரிடும். உங்கள் மிக நெருங்கிய நண்பர் எதை விரும்புகிறார் என்ற உணர்வு உங்களுக்கு இருப்பது போல ஆண்டவருக்கு எது பிரியம் என்ற உணர்வு எப்போதும் உங்களுக்கு இருக்க வேண்டும்.

தாமதமான கீழ்ப்படிதல், ஆவி யானவரின் ஆலோசனையை உதாசீனம் பண்ணுதல், உங்களுக்கும் ஆண்ட வருக்கும் எதிர் எண்ணங்கள், அவரது உயரிய சித்தத்தை எதிர்த்தல் ஆகியவை தேவவல்லமை உங்களில் பாய்ந்து வர தடையாயிருக்கும். ஆவிக்குரிய வல்லமை தேவனது ஆவிக்குரிய நியமங்களால் ஆளப்படுகின்றன.

5. சுய ஈடுபாடு, சுய மையம் மற்றும் செல் வாக்கான வாழ்க்கை முறை ஆகியவை ஆவிக்குரிய வலிமையைக் குறைப்பதற்கு ஏது வாகும்

R.A. ட்டாறி என்ற வேத போதகரும் D.L.மூடியுடன் இணை ஊழியருமாயிருந்தவர் இக்கருத்தால் அதிக ஆழமாக தாக்கமடைந்தார். அவர், வல்லமை சுய ஈடுபாட்டால் இழந்து போகிறது. தேவ வல்லமை சுயஒறுப்பின் வாழ்வுக்கு வழிநடத்த வேண்டும். எந்த ஒரு மனிதனும் சொகுசான வாழ்வுக்கும், இயற்கையான சுகபோகத்துக்கும், வீணான ஆடம்பரங்களுக்கும் இடங் கொடுத்துவிட்டு தேவனுடைய வல்ல மையை முழுமையாக அனுபவிக்க முடியாது. மாம்சத்தை திருப்திப்படுத்து வதும் ஆவியின் நிறைவை அனுபவிப் பதும் ஒரேவேளையில் கூடாததாகும் என்று கூறியிருக்கிறார்.

"..... ஆவியானவரின் வல்லமை நம்மில் தொடர நாம் எளிமையான வாழ்வு வாழவும் அன்னிய காரியங்களில் ஈடுபடாமலும் போஜனப்பிரியமில்லா தவர்களுமாயிருக்கவும், நல்ல போர்ச் சேவகனாய் தீங்கனுபவிக்கவும் ஜாக் கிரதையாயிருக்க வேண்டும். நான் சொகுசான வாழ்வுக்குப் பயப்படு கிறேன். அது பாவமல்ல, ஆனால் பாவத் திற்கு நெருக்கமானது. அது வெகு தந்திர மானதும் ஆவியின் வல்லமைக்கு எதிரா னதுமாயிருக்கிறது. இந்த நாட் களில் சில பிசாசுகள் 'ஜெபத்தினாலும் உபவாசத் தினாலேயுமன்றி வேறு எவ்விதத்திலும் போகாமலிருக்கின்றன' மத்.17:21.

தூய ஆவியானவர் சபை முழு வதற்கும், உலகத்திற்கும் நன்மை செய்கி றவர். சுயத்தை மையமாக கொண்டு வாழ்வது கிறிஸ்துவையும் அவருடைய ராஜ்யத்தையும் உதாசீனம் பண்ணுவ தாகும். பல வழிகளில் கிறிஸ்தவர்கள் தங்களை தூய்மைக்கும் தியாகமான ஆவிக்கும் எதிராகவும், துயரம் நிறைந்த உலகின் தேவைகளை உணராமலும் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் விரிவாக்கத்தை முக்கியப்படுத்தாமலும் தங்கள் சமயத் தைச் செலவு பண்ணுகிறார்கள். நாம் செய்யக்கூடிய அளவு ஊழியம் செய்ய வில்லை என்பதே உண்மை. அவர் கரிசனை கொள்ளும் விஷயங்களில் கரிசனை காண்பிக்காத நமக்கு எப்படி அவரது வல்லமையை ஊற்ற முடியும்?

6. சுய திருப்தியும் பெருமையும் ஆவியின் வல்லமையைத் தணிக்கும்

வல்லமை பெருமையால் உடனடி அகன்றுவிடக்கூடும். தேவன் தமது மகிமையை வேறொருவருடன் பகிர்ந்து கொள்வதில்லை. எவரேனும் பெருமையால் தேவன் ஒருவருக்கே உரிய மகிமையை எடுத்துக் கொள்ள விரும்பினால் உடனே அவனிடமிருந்து வல்லமை அகற்றப்படும். எனவேதான் சாத்தான் நம்மில் அடிக்கடி பெருமை யைத் தருகிறான்.

பில்லி கிரகாம் அடிக்கடி "தேவன் தம்முடைய கரத்தை என் வாழ்விலிருந்து எடுத்துவிட்டால் எனது உதடுகள் களிமண் உதடுகளாக மாறிவிடும்" என்று கூறுவார். நாம் அனைவரும் களிமண் பாண்டங்களே. "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" 2 கொரி.4:7.

தேவன் மோசேக்கு தன்னை முழுவதுமாக முகத்திற்கு முகம் வெளிப் படுத்தினார். அவன் மூலமாக பெரிய அற்புதங்களையும் நடப்பித்தார். எவரும் இந்த பாக்கியங்களைப் பெற்றதில்லை உபா.34:10,12. ஏனெனில் எண்.12:3-ன் படி "மோசேயானவன் பூமியிலுள்ள சகல மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ள வனாயிருந்தான்".

2 நாளா.26:15-16 வசனங்களில் உசியா ராஜாவினைக் குறித்து நாம் படிக்கிறோம். அவன் பலப்பட்ட போது பெருமையடைந்தான். அனேக கிறிஸ்தவ தலைவர்களின் சரித்திரமும் இவ்வாறாகவே காணப்படுகிறது. எசேக்கியா ராஜாவும் தன் ஜெபத்திற்குப் பதில் கிடைத்து சுகம் பெற்றபோது பெருமையடைந்துவிட்டான் 2நாளா.32:25. நேபுகாத்நேச்சாரும் தேவனால் கனப் படுத்தப்பட்டு, பெருமையடையு மட்டும் நன்கு பயன்படுத்தப்பட்டான் தானி.5:20.

சாத்தான் வீழ்ச்சியடைந்ததற்குக் காரணமானதும் பெருமையே (எசேக். 28:2,5,17; 1தீமோ. 3:6) **பெருமை நம்மை சாத்தானைப் போலாக்கி விடுகிறது.** அது தேவனுடைய முகத்தை நம்மை விட்டுத் திருப்பிவிடுகிறது. "தேவன் பெருமை யுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை யளிக்கிறார்" 1 பேதுரு 5:5.

சுயதிருப்தி பெருமைக்கு முதற் படியாயிருக்கிறது. எந்தவிதமான புகழை ஏற்றுக்கொள்வதும் தேவனுக்குரிய புகழை மறுப்பதற்குச் சமமாகும். தேவ உதவியை அடிப்படையாகக் கொண்ட சுயநம்பிக்கை தாழ்மையானதும் தேவனைச் சார்ந்ததுமாகும். ஆனால் மாம்சீக சுய நம்பிக்கை தேவனுடைய இனிய பிரசன்னத்தையும், வல்லமையை யும் இழக்கச் செய்துவிடும்.

ஊழியத்தில் வெளிப்படும் வல்லமை ஆழமான தாழ்மையினால்

வராவிட்டால் அது பொய்யான வல்லமையாகும். அது தேவ வல்லமையல்ல, அது சாத்தானுடைய வல்லமையாகக் கூட இருக்கலாம். அவன் ஒளியின் தூதனாக தன்னை காண்பிப்பதில் விருப்பமுள்ளவன் (2 கொரி.11:14)

7. அதிகப்படியான விளையாட்டுத் தன்மை ஆவிக்குரிய வல்லமையைத் தணிக்கலாம்

நகைச்சுவை தேவன் கொடுத்த ஈவு. ஆனால் அது தகுதியான முறையிலும் சுமாரான அளவிலும் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். தேவன் கூட நல்ல நகைச்சுவையில் பிரியமுடையவராயிருக்கிறார். ஆகவேதான் அவர் நாம் நகைச்சுவையை விரும்பவும் சிரிக்கவும் சிருஷ்டித்தார். ஆனால் தேவன் ஆசீர்வதிக்கும் நகைச்சுவைக்கு ஒரு காலமும் இடமுமுண்டு. ஒரு ஆவிக்குரிய முக்கிய கடமைக்கு முன்னால் சாத்தான் என்னையும் என்னோடுள்ளவர்களையும் மகிழச் செய்து எங்களது ஆவிக்குரிய ஆயத்தங்களை இழக்கச் செய்த அனுபவம் எனக்கு உண்டு. அவரது வல்லமை நமக்கு அதிகமாகத் தேவைப்படும் தருணங்களில் சாத்தான் தேவனுடைய அபிஷேகத்தையும் வல்லமையையும் நம்மிடமிருந்து எடுத்துக்கொள்ள முயற்சிப்பான். பல மணி நேரங்கள் ஜெபத்தால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆவியின் வல்லமையும் அவரது பிரசன்னமும் ஐந்து நிமிட தகாத நகைச்சுவையால் இழந்துவிடலாம்.

8. பாவம் எப்போதும் ஆவியின் வல்லமையை அழிக்கவும் தணிக்கவும் கூடியது

மனப்பூர்வ கீழ்ப்படியாமை, ஒளிக்கு எதிரான பாவம், பிறருக்கு எதிரான பாவம், தேவனுடைய ஒளியில் நடப்பதில் தோல்வி போன்ற யாவும் தேவதயவு அவருடைய பிரசன்னம் யாவற்றையும் தடுத்து நிறுத்தும். பாவம் ஆவியின் வல்லமையினைத் தடுத்து உங்களை நிரப்புவதையும் பயன்படுத்துவதையும் நிறுத்திவிடுகிறது. **பாவம் ஜெபம் பலனளிக்காமலாக்கிவிடுகிறது** சங்.66:18-ன்படி இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தால் ஆண்டவர் ஜெபத்தினைக் கேட்பதில்லை. "நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்" 1 யோவா.3:4.

இஸ்ரவேலர் தேவனுக்குக் கீழ்ப்படியாமல், தேவனோடுள்ள உடன்படிக்கையை மீறினபோது தேவன் அவர்கள் ஜெபத்தையும் கண்ணீரையும் கவனிக்கவில்லை உபா.1:45. சிம்சோன் தலை சிரைக்கப்பட்டு தனது வல்லமையை இழந்ததுபோல அனேக ஊழியக்காரர் கீழ்ப்படியாமையால் வல்லமையை இழந்து நிற்கின்றனர்.

❖ **வேதாகம நாட்களில் ஆசாரியர்கள் தேவாலயத்தில் அல்லது கூடாரத்தில் பணிவிடை செய்யும்முன் தங்களைச் சுத்திகரித்துக் கொண்டார்கள். நமக்கும் ஆவிக்குரிய ஸ்நானம் அவசியம் அல்லது அடிக்கடி தேவசன்னிதானத்தில் சமயம் செலவிட வேண்டும்.**

❖ **சபைமக்களின் ஆவிக்குரிய தாழ்ச்சி சபையின் தோல்விக்குக் காரணம்.**

சிலவேளைகளில் நாம் கீழ்ப்படியவில்லை என்பதை அறியாதிருந்தும், இருதயத்தில் ஆவியை துக்கப்படுத்திய உணர்வு ஏற்படலாம். ஆனால் நாம் அவரை துக்கப்படுத்தியிருந்தால் அவர் மெதுவாக நம்மோடு பேசி, நம்மைத் தொடுவார். நாம் செவி கொடுத்தால் அவர் எளிதாக நமது கவனத்தைக் கவர்ந்து, நம்மோடு பேசுவார்.

மன்னிப்பும், கழுகுதலும் தேவனிடம் உண்டு. மறுபடியும் அவரிடம் சென்று தயவையும், பிரசன்னத்தையும் வல்லமையையும் பெறலாம் (1 யோவா.2:1-2) இருதயம் நொறுங்கி, தாழ்மையுடன் கர்த்தரிடம் திரும்பும் போது, மன்னிப்பு தேவனுடைய தயவுக் காகவும் வல்லமைக்காகவும் வாசலைத் திறந்தளிக்கும்.

தேவனுடைய வார்த்தை - ஒளி, ஜீவன் மற்றும் வல்லமையுமாயிருக்கிறது

God's word - Light life and Power

Adolph Saphir (1831-1891)

நாம் வேதபுத்தகத்தை அதிக பயபக்தியோடும் நன்றி உணர்வோடும் திறந்து வாசிக்க வேண்டும். "அவை பூலோகில் பேசும் பரலோக வார்த்தைகளாகவும், அவற்றில் நாம் ஜீவனுள்ள தேவனுடைய குரலைக் கேட்கக்கூடிய தாகவுமிருக்கிறது" என்று ஒருவர் கூறியிருக்கிறார்.

தேவனுடைய இருதய எண்ணங்களையும் நோக்கங்களையும் தமது மொழியிலும் தமது வார்த்தைகளிலும் வெளிப்படுத்தும் மிக விலையேறப் பெற்ற வார்த்தைதான் வேதவாக்கியங்கள்.

தேவனுடைய சத்தத்தைக் கேட்பது நமது மனச்சாட்சி சரியென்று சொல்லும் வேலை மட்டுமல்ல நமது மனச்சாட்சி, சித்தம், உள்ளம், நமது முழுமையான உள்ளான மனிதன் யாவும் இந்த வார்த்தையிலிருந்துதான் ஒளியையும் பெலனையும் பெறுகின்றன.

நாம் வேதபுத்தகத்தைச் சரியாக உட்கொள்ளாதபடியால் நமது ஆவிக்குரிய வாழ்வு பெலவீனமாயுள்ளது. வேத வாக்கியங்களெல்லாம் "..... உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும் நீதியைப்படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" 2 தீமோ.3:17. நாம் அறிந்து கொள்வதற்காக எழுதப்பட்டிருக்கும் யாவற்றையும் கற்று உத்தம சீஷர்களாகவும் கல்விமான்களாகவும் மாறுவோம்.

ஜீவனும் மறுரூபமாக்குவதுமான வல்லமை

அவரைக் கண்டுகொள்ளவே தேவன் அவரது வார்த்தையினை நமக்கு அருளியிருக்கிறார். தேவன் ஒருவரே ஜீவனாயிருக்கிறார். அவரில் ஜீவன் இருப்பதுபோல் அவருடைய வார்த்தையிலும் ஜீவனிருக்கிறது. அவருடைய வார்த்தைகள் நன்மைகளை மட்டுமல்ல, எல்லா நன்மைகளுக்கும் மேலான ஜீவனையே அளிக்கக்கூடியது.

தேவனுடைய சத்தம் வல்லமையுடையதாயிருப்பதால் அது ஜீவனுள்ளது என்று எபி.4:12-ல் படிக்கிறோம். கிறிஸ்துவின் வார்த்தைகள் "ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன" யோவா.6:63. எனவே அவை விதைக்கு ஒப்பிடப்படுகின்றன. அது முக்கியத்துவமற்றதாகக் காட்சியளித்தாலும் நல்ல நிலத்தில் விழுந்தால் அதன் திறனைக் காண்பிக்கும். அது எப்படி வளருகிறதென்பதை நாம் அறிவதில்லை.

நாம் ஏற்றுக்கொண்ட தேவ வசனம் ஒரு உயிரற்ற பொருளாக நமது அறிவோடு இணைந்திருப்பதில்லை. அது தொடர்ந்து நமது எண்ணங்களிலும் வார்த்தைகளிலும் குணத்திலும் நடக்கையிலும் சுறுசுறுப்பாக வளர்ந்து, சில நூறு மடங்காகவும், அறுபது மடங்காகவும், முப்பது மடங்காகவும் பலனளிக்கிறது. எனவே "எல்லாவித அழுக்கையும் துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதுமாயிருக்கிற வசனத்தை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள் யாக்.1:21. வசனத்தை சத்துரு எடுத்துச் சென்றுவிடாதபடி கவனமாக நமது இருதயத்திலும் ஞாபகத்திலும் வைத்துக் கொள்வது அவசியம்.

தேவனுடைய நோக்கத்தின்படி ஆவியானவரைச் சார்ந்து நாம் வேதத்தை வாசிக்கும்போது நம்மில் ஆச்சரியமான தாக்கம் ஏற்படும். அது நமது எண்ணங்களிலும் வார்த்தைகளிலும் வெளிப்படும்.

தேவன் நம்மோடு இடைபடுவதை இரண்டு சிறந்த பாடங்களுக்குக் கீழ் அமைக்கலாம். அவை பாவமும் மற்றும் தேவையும் அவரது கிருபையும் அதன் நிறைவுமாகும். எனவே தேவ வசனம் நமது ஜீவனை எடுத்துவிட்டு உயிர்த்தெழுதலின் ஜீவனை நமக்கு அளித்து அதனால் நமது வெறுமையை காண்பித்து கிறிஸ்துவின் ஐசுவரியத்தையும் வெளிப்படுத்துகிறது.

வேதவாக்கியங்களில் கிறிஸ்து

வேதபுஸ்தகம் ஒரு ஜீவபுஸ்தகம். அதை ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி பயன்படுத்துகிறவர்கள் மட்டுமே அதன் சரியான கருத்தைப் புரிந்துகொள்ள முடியும். 'கிறிஸ்துவை அறிந்து கொள்வதற்காக' படிப்பவர்களுக்கு மட்டுமே பயன்தரக்கூடும். எனவே தேவபிள்ளைகள் அதனை முழுவதும் படித்து முடிப்பதற்காக மட்டுமல்ல, நிகழ்காலத்திற்காகவும் வருங்காலத்திற்காகவும் பயன்படுத்த வாசிப்பார்கள்.

தேவ வசனம் கிறிஸ்துவை மையமாகக் கொண்டது. எனவே விசுவாசி பிதாவின் அருளையும் ஆவியானவரின்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

செயல்பாட்டினையும் நடத்துதலையும் ஆறுதலையும் கண்டுகொள்ள முடியும். அவன் பசும்புல்லை மட்டுமல்ல, தேவன் தாமே அதனண்டை அழைத்துச் செல்வதை உணரமுடியும். தனது ஆத்துமாவுக்கு பரம மேய்ப்பன் மூலமாக நன்மையானதையும் புதிதானதையும் பெற முடியும்.

அதோடு ஜாக்கிரதையோடும், தியானத்தோடும் வேதத்தைப் படிக்க வேண்டும் என்ற உணர்வும் ஏற்படுகிறது. ஏனெனில் மறைத்து வைக்கப்பட்ட பொக்கிஷம் அங்கு உண்டு. அதை ஆழமாகத் தோண்டியே புதையலைக் கண்டுபிடிக்க முடியும். நமது இருதயங்களும் வாழ்வுகளும் தேவ வசனத்திற்கு ஏற்றபடி அமைய வேண்டும். அதன் வார்த்தைகளைப் புரிந்துகொள்வதில் ஏற்படும் கடினம் புத்திபூர்வமானதல்ல, அது ஆவிக்குரியது. நமது இருதயமும், மனச்சாட்சியும் சித்தமும் அதில் ஈடுபட வேண்டும். எனவே வேதவசனத்தைச் சுயஒறுப்புடன் படிக்க வேண்டும்.

119-ம் சங்கீதத்தில் வேதவசனத்தை நேசிக்கிறவர்களின் மனப்போங்கு, கட்டுப்பாடு ஆகியவற்றைக் குறித்த அற்புத விளக்கங்களை காணலாம். "உம்முடைய வசனத்தை நான் காத்து நடக்கும்படிக்கு சகல பொல்லாத வழிகளுக்கும் என் கால்களை விலக்குகிறேன்" வச.101. "என் இருதயம் பொருளாசையைச் சாராமல் உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்" வச.36. "வீண் சிந்தனைகளை நான் வெறுத்து, உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்" வச.113. மறைந்திருக்கும் காரியங்களை காண வாஞ்சிக்கிறவர்கள். "மறைவான குற்றங்களுக்கு என்னை நீங்கலாக்கும்" சங்.19:12 என்று ஜெபிப்பார்கள்.

வேதவசனம் கிறிஸ்துவோடு தொடர்புடையது. கிறிஸ்து ஜீவனாயிருக்கிறபடியால் வேதவசனமும் ஜீவனுள்ளது. கிறிஸ்து தேவவல்லமையாயிருப்பதால் அதுவும் வல்லமையுடையது. தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுமுள்ளதாகவும், இரு புறமும் கருக்குள்ள பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயுமிருக்கிறது" எபி.4:12. ஏனெனில் கிறிஸ்து இஸ்ரவேலில் அனேகர் விழுவதற்கும், எழுந்திருப்பதற்கும் காரணமானவர்.

கிறிஸ்து மனிதனிலுள்ளவைகளை அறிபவர். நாத்தானுவேல் அத்தி மரத்தின் கீழிருந்தபோது அவனைக் கண்டார். இருதயத்தில் பொல்லாப்புடனிருந்த பரிசேயரை அவர் கண்டறிந்தார். "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாகவும் வெளியரங்கமாகவு மிருக்கிறது" எபி.4:13. எழுதப்பட்டதும் சொல்லப்பட்டதுமான வார்த்தைகள் ஆண்டவராகிய இயேசுவைக் குறிக்கின்றன.

வேதவசனம் உத்தம பாலாகவும் செழிக்கவைக்கும் உணவாகவும் ஆத்துமாவுக்கு அமைகிறது. கிறிஸ்து ஜீவ அப்பம். அவர் இருளில் பிரகாசிக்கிற ஒளி. அவரே ஞானமாகவுமிருக்கிறார். எல்லாம் அவருக்குள் அடங்கியிருக்கிறது.

இயேசுவே வாசல். அவர் வழியாகவே வசனத்தின் சரணாலயத்திற்குள் பிரவேசிக்க முடியும். இயேசுவிடம் நாம் வரும்போது அவருடைய வசனத்தை நமக்குச் சொந்தமாக்கிக் கொள்கிறோம். அவரிடத்தில் நித்திய ஜீவவசனங்களுண்டு. அவர் மட்டுமே வசனத்தைக் கொடுக்க முடியும் யோவா.17:14. வசனத்தை அவர் மூலமாகவும் அவரிலும் பெற்றுக் கொள்வதால் அவரை வேத வாக்கியத்தின் அனைத்துப் பகுதிகளிலும் காண முடியும்.

எழுப்புதலுக்காக ஜெபிக்கிறோம்!
எழுப்புதலுக்காக பிரசங்கிக்கிறோம்!

சென்னை மாவட்டத்தில்

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

காலம் : **12-11-2022** 2வது சனிக்கிழமை
காலை 10 மணி - மாலை 5 வரை

இடம் : **Christian Assembly Church**
71/215, Mettu Street,
Ayanavaram
Chennai 600 023

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்**
மொபைல் : 95432 21008

❖ வேலைகளின் பல வடிவங்களில் சுருக்க ஜெபம், துதி, ஆவிக்குரிய உறவு மற்றும் ஆண்டவரின் மேலுள்ள அன்பை வெளிப்படுத்துதல் போன்றவற்றிற்கு அற்புதமான வாய்ப்புகள் உண்டு.

❖ நாம் சலவை செய்யும் போதும், நடக்கும் போதும், வாகனங்களை ஓட்டும் போதும் எந்த வேலையைச் செய்தாலும் விருப்பமிருந்தால் நேரத்தை தேவனோடு கூடச் செலவிட முடியும்.

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **Zion Prayer House**
1,Lakshmipuram, New Avadi Road, Villivakkam
Chennai 600 049 Cell: **94448 08608**

நாள் : **08.10.2022,** 2-வது சனிக்கிழமை

நேரம் : காலை 10.00 மணி முதல்
மாலை 05.00 மணி வரை

செய்தி : சகோதரன் **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** குஜராத்
IEM மிஷனெரிகள், தமிழ்நாடு

தொடர்பு : **வருகையின் தூதன்** மொபைல் : 9543221008

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

சபை தூய ஆவியால் சிருஷ்டிக்கப்பட்டது. தங்கள் மார்க்க வாழ்வினை முதலிலிருந்து கடைசிவரை தூய ஆவியானவருக்கு அர்ப்பணித்த **விசுவாசிகளின்** ஒரு சமுதாயமே **சபை.**

ஆவியானவர் ஒருபோதும் தனது அதிகாரத்தை கைவிடுகிறவரோ தமது வல்லமையை மாற்றுகிறவரோ அல்ல. கிறிஸ்துவின் **சபையில்** போப் அல்லது பார்லிமென்ட் அல்லது மாநாடு அல்லது பரிபாலன குழுக்கள் மேலாண்மை கொள்வதில்லை. தேவனால் ஆளப்படுவதற்குப் பதிலாக, மனிதனால் நிர்வகிக்கப்படும் **சபை** தோல்வியையே தழுவும்.

எந்திரங்கள் எத்தனையிருந்தாலும் அவை இயங்க வல்லமை வேண்டுமே. அது போல தேவனுடைய உத்தம பணி **சபை** மூலம் நடைபெற அதற்கு ஆவியானவரின் வல்லமை தேவை.

சபை ஒரேவிதமாக செயல்பட்டால் கூட்டமாக மக்கள் வரலாம். ஆனால் ஷெக்கைனா இருப்பதில்லை.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason